## கம்பம் நகராட்சி

**2020–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் (06.01.2020) ஆம் நாள் திங்கள் கிழமை பிற்பகல் 4.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

## கூட்டப் பொருட்கள்

**1.** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை சீற்றங்களாலும் குடிநீர் திட்ட பணியின் போது சேதமடைந்த சாலைகளை புதிதாக அமைத்திடவும் மற்றும் புதுப்பிப்பதற்கும், சிறுபாலங்கள் அமைப்பதற்கும் கீழ்கண்டுள்ளவாறு பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | Providing B.T. Surface by CMP at Ward No:31, L.F road near Pet clinic in Cumbum Municipality | 37.00 |
| 2. | Providing B.T. Surface by CMP at Ward No:29, Ranger Office Road Cross Street in Cumbum | 39.00 |
| 3. | Providing B.T. Surface by CP at Ward No:28,Surulipatti Road Cross Street in Cumbum Municipality | 35.00 |
| 4. | Improvement of B.T. Surface in Ward 04, Odai karai Street (L.F. road to Tower west) in Cumbum Municipality | 39.00 |
| 5. | Providing of Paver block road surface in Ward No: 32, Sukkangalpatti Road Cross Street ) in Cumbum Municipality | 30.00 |
| 6. | Construction of RCC Small culverts in Various Streets (14 Nos) & Construction of SWD in Malayammal puram ) in Cumbum Municipality | 27.91 |
| | **மொத்தம்** | **207.91** |

மேற்கண்ட மதிப்பீட்டின் படி சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் சிறுபாலங்கள் கட்டும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி பணிகளுக்கான திட்ட மதிப்பீட்டு தொகையினை 14வது மத்திய நிதிக்குழு மான்யம் 2019–2020 திட்ட நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான நகராட்சி பேருந்து நிலையம் முதல் கே.கே.பட்டி செல்லும் சாலையில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில், பொதுசுகாதாரம் மற்றம் பொதுமக்கள் நலன் கருதியும் நகரில் சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளாக தரம் பிரித்திட ஏதுவாக கீழ்கண்ட பகுதிகளில் RRC மையங்கள் (Resource Recovery Center)அமைத்திடவும், பணிகள் செய்திட ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகைக்கும், செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | உத்தேச மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| **1.** | கம்பம் நகராட்சி வார்டு எண். **20**–ல் புதிதாக RRC-மையம் எண்– 1 (Resource Recovery Center)அமைக்கும் பணி | **9.50** |
| **2.** | கம்பம் நகராட்சி வார்டு எண். **20**–ல் புதிதாக RRC-மையம் எண்– 2 (Resource Recovery Center)அமைக்கும் பணி | **9.50** |
| **3.** | கம்பம் நகராட்சி வார்டு எண். **20**–ல் புதிதாக RRC-மையம் எண்– 3 (Resource Recovery Center)அமைக்கும் பணி | **9.50** |

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**3.** இந்நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள குடிநீர் வாகனம் டிராக்டர் டி.சி.யு.9465 மற்றும் டிரெய்லர் டி.சி.யு. 969 வாகனத்திற்கு தகுதி சான்றிதழ் 07.01.2020 உடன் முடிவடைவதால் மராமத்து பணிகள் மற்றும் தகுதி சான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், அவசர அவசியம் கருதி வாகனத்தில் பழுது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 12.12.2019ம் தேதி உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்கண்ட 3 விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| **வ.எண்.** | **நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி** | **மதிப்பீட்டு விலை விகிதம் ரூ** |
|---|---|---|
| 1 | ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ், நகராட்சி அலுவலகம் எதிரில் , கம்பம். | 49950 |
| 2 | பரமசிவம் ஆட்டோ கேரேஜ் வ.உ.சி.திடல், கம்பம் | 58050 |
| 3 | ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ் CMC நகர் கம்பம். | 56600 |

**அலுவலகக் குறிப்பு :–** உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம் மற்றும் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ், கம்பம் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**4.** இந்நகராட்சிக்கு சொந்தமான நந்தகோபால்சாமி நகர் பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நுண்உர செயலாக்க மையத்திற்கு (MCC) செல்வதற்கான அணுகு சாலை அமைக்கவும், உரம் உலர்வைக்க ஷீட் மற்றும் தீயணைப்பு கருவிகள் போன்றவை பொருத்திடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. **9.80** இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளவும், மேற்படி பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **5.** | ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் (IUDM) திட்டம் 2018–19 –இன் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான தேனி–குமுளி சாலையில் அமைந்துள்ள உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்தப்படும் இடத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட உள்ளது. மேற்காணும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ள இடத்தில் மண்ணின் உறுதி தன்மை அறியும் பொருட்டு மண்பரிசோதனை செய்து உரிய சான்றிதழ் வழங்க கோரியுள்ளதன்பேரில், முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, போடிநாயக்கனூர் அவர்களின் கடிதம் GCE/PCE/SOIL/2019/72C நாள். 27.112019ன் படி ஆய்வு கட்டணம் ரூ. 21,240/– (சேவை வரி உட்பட) செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி மேற்கண்ட தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு :–** **1)**மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்துவதை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 1699/2018/இ1)** |
| **6.** | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இரண்டு டிப்பர் லாரிகள் மற்றும் TATA ACE வாகனம் மூலம் தினமும் குப்பை கழிவுகள் சேகரம் செய்யப்பட்டு, அவை MCC மற்றும் உரக்கிடங்கு பகுதிக்க கொண்டு சென்று உரம் தயாரிக்கும் பகுதிக்கு கொண்டு சென்று உரம் தயாரிக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. பண்டிகை நாட்கள் மற்றும் கோவில் திருவிழா காலங்களில் அதிக அளவில் குப்பை கழிவுகள் சேருவதால் லாரிகளில் அதிகமாக குப்பை கழிவுகள் ஏற்றப்பட்டு உரக்கிடங்கு பகுதிகளுக்கு கொண்டு செல்லும் போது, அவை காற்றுக்கு சிதறி ரோட்டில் விழுந்து பொதுமக்களுக்கு தொல்லை எற்படுத்துகிறது. இவற்றை தடுக்கும் பொருட்டு புதிதாக மேற்கண்ட வாகனங்களுக்கு **8** எண்ணம் நைலான் கயிறு வலைகள் வழங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. **10,000/–**க்கு (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு :–** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். மேலும், பொது நிதியிலிருந்து மேற்படி செலவினத் தொகையை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3837/2017/எச்1)** |
| **7.** | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் பழுதாகிவிட்டது. எனவே, மேற்படி பழுதினை சரிசெய்ய ஆகும் செலவினம் தொகை ரூ. **40,000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு :–** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் வாங்குவதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோருவரை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3726/2019/எச்1)** |

**ஒப்பம்/– திருமதி. ரா. கமலா**
**ஆணையாளர்,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 06.01. 2020**
**இடம். கம்பம்**